1992 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி டப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) பரமக்குடியில் மின் அழுத்தக் குறைவால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பரமக்குடி தொகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பது குறித்து'' மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விவர அறிக்கை.

(1) பரமக்குடி நகரப் பகுதியில் உள்ள குழல் விளக்குகள் யாவும் சரிவர எரிகின்றன.

(2) ஆனால் பரமக்குடியின் ஊரகப்பகுதிகளிலுள்ள தெரு விளக்குகள் மின் மாற்றியிலிருந்து வெகு தொலைவில் உள்ளதால் மாலை வேளைகளில் இக் குழல் விளக்குகள் சரிவர எரிவதில்லை. இப் பகுதிகளில் மின் விநியோக நிலைமையைச் சீர் செய்ய கீழ்க்கண்ட பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டு முடிக்கப்பட்டு விட்டன.

[திரு. எஸ். கண்ணப்பன்] [1992 மார்ச் 17

(அ) மூன்று 100 கே.வி.ஏ./22 கி.வோ/433 வோல்ட் மின்மாற்றி முறையே 20-12-1990, 23-1-1991, 10-6-1991 அன்று நிறுவப்பட்டுள்ளன.

(ஆ) ஒரு 100 கே.வி.ஏ. மின்மாற்றியின் கொள்திறன் —200 கே.வி.ஏ. ஆக 20-8-1991 அன்று உயர்த்தப்பட்டது.

(இ) சென்ற ஆறு மாதங்களில் 4 கி.மீ. நீளமுள்ள மும்முனை 4 கம்பி பாதைகளில் கனமான கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(ஈ) மேலச்சத்திரத்தில் 100 கே.வி.ஏ/22 கி.வோ/433 வோல்ட் மின் மாற்றியும், மகளிர் குழந்தைகள் மருத்துவமனை அருகில் ஒரு 100 கே.வி.ஏ./22 கி.வோ/433 வோல்ட் மின் மாற்றியும் அமைக்கப்படவுள்ளது. மேலும் இப்பகுதிகளில் இருபது (20) புதிய மின்மாற்றிகள் அமைக்கப்படவுள்ளன.

(உ) பரமக்குடி துணை மின் நிலையத்தின் தற்போதுள்ள 3 எம்.வி.ஏ. மின் மாற்றிக்கு பதிலாக புதிய 10 எம்.வி.ஏ. உயர் மின் அழுத்த மின்மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டு இதற்கான மதிப்பீடு அனுமதி வழங்கும் தருவாயில் உள்ளது. இம்மின்மாற்றி செயலிலிருக்கும்போதே விநியோக மின் அழுத்தத்தினை கூடுதலாக்கும் On load tap charging arrangement வசதி உள்ளதாக இருக்கும். இது தவிர பரமக்குடிக்கு வரும் 110 கே.வி. உயர் மின் அழுத்தப் பாதை சந்திப்பு முறையில் சிற்சில மாற்றங்கள் செய்வது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

மேற்கண்ட மேம்பாட்டு பணிகள் மூலம் பரமக்குடி தொகுதியில் மின்னழுத்தம் முழுவதுமாக சீரடையும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் பரமக்குடி நகரப் பகுதியில் குழல் விளக்குகள் யாவும் சரிவர எரிவதாகவும், ஊரகப் பகுதிகளில் மாலை வேளைகளில் குழல் விளக்குகள் சரியாக எரியவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, பல்வேறு நலத் திட்டங்கள் மின்சார வாரியத்தின் மூலம் நடத்துவதற்காகவும் விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எதையுமே உடனுக்குடன் செய்து முடிக்கிற ஆற்றல் மிக்க பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த 20 புதிய மின் மாற்றிகளையும், 3 எம்.வி.ஏ. மின்மாற்றிக்குப் பதிலாக 10 எம்.வி.ஏ. உயர் அழுத்த மின்மாற்றியையும் உடனடியாக அமைத்துத் தந்து, பரமக்குடி தொகுதியில் மின்சார வாரியம் சரியாக இயங்குவதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, மின்சார வாரியம் எப்படி செயல்படுகிறது என்பதை நல்ல உள்ளம் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான், இராமநாதபுரம் மாவட்டத்தில் 30 ஆண்டுகளாக சீர்கெட்டுப் போயிருந்த மின் நிலைமைகளை 30 நாட்களிலேயே சீரமைத்து, இராமேஸ்வரம் பகுதியிலே அதற்காக 300 கிராமங்களுக்கு முறையாக மின் விநியோகம் தரப்பட்டது. அதேபோல், பரமக்குடி நகரில் புகார் வந்த நேரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த விவர அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற 6 நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்பட்டன. நம்முடைய ஆட்சிக் காலத்திலே தான், 100 கே.வி.ஏ. மின்மாற்றியின் கொள்திறனை பரமக்குடியில், 200 கே.வி.ஏ.-ஆக மாற்றி, 20–8–1991-இல் உத்தரவிடப்பட்டது. ஆகவே, பல்வேறு முயற்சிகளை எடுத்திருக்கிறது என்பதை இந்த விவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதியில் எந்தப் பிரச்சினை வந்தாலும் உடனடியாக இந்த அரசின் கவனத்திற்கு வருகிற நேரத்திலே, மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டில், இப்போது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) விவசாய மண் பரிசோதனை நிலையம் வேலூரிலிருந்து சேலம்—ஆத்தூருக்கு மாற்றப்பட வேண்டுமென்ற உத்தரவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ''வேலூரில் கடந்த 15 ஆண்டுகளாக இயங்கி வரும் விவசாய மண் பரிசோதனை நிலையத்தை, சேலம்—ஆத்தூருக்கு மாற்ற வேண்டுமென விவசாயத் துறை இயக்குநர் 10–2–1992-ஆம் தேதி பிறப்பித்த உத்தரவினால், பாதிக்கப்பட்ட வடாற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்ட விவசாயிகளினுடைய பதட்ட நிலை குறித்து'' மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS